என்பதை உணர்ந்து அதற்கேற்றபடி இலங்கை அரசு தக்க நடவடிக்கையினை மேற்கொள்ளும் வகையில் தக்க முடிவுகளை எடுப்பதற்குரிய வகையில் அதற்கு உறுதுணை செய்கின்ற வகையில் சட்டத்திற்கு உட்பட்ட வகையில், இந்திய அரசு முறைகளை மேற்கொள்கின்ற வகையில் எந்த அளவுக்கு அந்த முறை பயன்படும் என்ற வகையில் இந்த அவை ஏற்றுக்கொள்ளும் என்ற நம்பிக்கையோடு இந்த அறிக்கையை வைக்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான்: தலைவரவர்களே, அர்த்தாலை ஒட்டி கடைகள் அடைக்கப்படும் என்று சொன்னார்கள். ஆனால் கள்ளுகடைகள் பற்றி அமைச்சரவர்கள் குறிப்பிட்டுச் சொல்லவில்லையே.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: எல்லாவிதமான கடைகளும் என்று தெரிவித்திருப்பதன் காரணத்தால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற கடைகளும் அதிலே அடங்கும்.

8. அரசினர் தீர்மானம் (தொடர்ச்சி)

(அ) அலுவல் வரிசையில் மாற்றம் (தொடர்ச்சி)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''இன்றைய நிகழ்ச்சி நிரலில் அடுத்துள்ள மற்ற சட்ட முன் வடிவுகளுக்கு முன் 1981-ஆம் ஆண்டு பாரதியார் பல்கலைக் கழகச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 79/1981) மற்றும் 1981-ஆம் ஆண்டு பாரதிதாசன் பல்கலைக் கழகச் சட்ட முன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 80/1981) ஆகியவற்றை எடுத்துக் கொள்ளவேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

4. அறிவிப்புகள் (தொடர்ச்சி)

(ஈ) பாரதியார் பல்கலைக் கழக சட்ட முன்வடிவு, 1981 (ஆ.இ)

(உ) பாரதிதாசன் பல்கலைக் கழக சட்ட முன்வடிவு. 1981 (ஆ.இ)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1981 ஆம் ஆண்டு பாரதியார் பல்கலைக் கழக சட்ட முன்வடிவை (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 79/1981) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள ஆளுநர் தமது இசைவை தெரிவித்துள்ளார்.

1981 ஆகஸ்ட் 31]

1981-ஆம் ஆண்டு பாரதிதாசன் பல்கலைக் கழக சட்ட முன்வடிவை (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 80/1981) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

திரு. அ. ரகுமான்கான்: தலைவரவர்களே, இப்போதுதான் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் போகிறீர்கள். ஆனால் யாரும் விவாதம் பண்ணத் தயாராக இல்லை. ஆகவே அதைப்பற்றிப் படிப்பதற்கு அவகாசம் வேண்டும்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, அந்தச் சட்ட முன்வடிவுகளை எடுத்துக்கொள்வது பற்றி, ஏற்கெனவே அறிவிப்பு கொடுக்கப்பட்டு விட்டது. ஆகவே திடீரென்று எடுத்துக் கொள்ளவில்லை.

திரு துரைமுருகன்: எதிர்க்கட்சிகள் பேசுவதற்கு அவகாசம் வேண்டும்.

7 அரசினர் சட்டமுன்வடிவுகள் (தொடர்ச்சி)

(உ) பாரதியார் பல்கலைக் கழக சட்டமுன்வடிவு, 1981.

(ஊ) பாரதிதாசன் பல்கலைக் கழக சட்டமுன்வடிவு, 1981.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

"1981-ஆம் ஆண்டு பாரதியார் பல்கலைக் கழகச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 71/1981) ஆய்வுக்கு* எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்.

நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

"1981-ஆம் ஆண்டு பாரதிதாசன் பல்கலைக் கழகச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 80/1981) ஆய்வுக்கு* எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்''.

இவ்வமயத்தில் இச்சட்ட முன்வடிவுகள் பற்றி சில முக்கிய அம்சங்களை எடுத்துக் கூற விரும்புகிறேன்.

---

*1981-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 29 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

*1981-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 29 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.